[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2015 மார்ச் 31

கூடுதல் விலை கொடுத்து வாங்கிய மின்சாரத்திற்குரிய பணத்தையும் அம்மா அவர்களுடைய அரசுதான் கட்டியது. என்ன பேசுகிறீர்கள் நீங்கள்? இப்போது நான் கேட்கிறேன். இந்த நான்காண்டு காலம், 2007 முதல் 2011 வரை, நீங்கள் அந்தத் திட்டத்தை கிடப்பில் போட்டீர்களே, BHEL நிறுவனத்தைச் செயல்படுத்தவிடாமல் முடக்கிப் போட்டீர்களே, இந்தக் கூடுதல் விலை கொடுத்து வாங்குவதற்காகத்தானா? 'தான் திருடி, மற்றவர்களை நம்பாள்' என்ற பழமொழி ஒன்று இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களைப்போல எல்லோரையும் நினைத்து தயவுசெய்து பேச வேண்டாம். இப்படி கற்பனையான குற்றச்சாட்டுகளைச் சொல்வதை தயவுசெய்து இனிமேலாவது நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டு, இந்த அளவிலே விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் மேலும் விவாதம் இல்லை. (குறுக்கீடு) இல்லை, இது சிறப்புக் கவன ஈர்ப்பு. இதில் மேலும் விவாதம் இல்லை. (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள்.

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அவை உரிமைக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், பேரவைத் துணைத் தலைவர், அவை உரிமைக் குழுவின் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் வி.சி. சந்திரகுமார், அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், எஸ்.ஆர். பார்த்திபன், எல். வெங்கடேசன், சி.எச். சேகர் மற்றும் க. தினகரன் ஆகியோர்மீதான உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு